**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**STC.No.842/2022**

**Deposition of LW-1/PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. நிசாந்த் | **Age** | : | 25/2026 |
| **Father's Name** | : | திரு. சிவமுருகன் | **Religion** | : | இந்து |
| **Village** | : | போடிநாயக்கனூர் | **Calling** | : | தனியார் வேலை |
| **Taluk** | : | போடிநாயக்கனூர் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **11/06/2026.**

எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**சாட்சி மனு எண் 394/2026ன் கீழ் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

3). சம்பவம் நடந்த நேரம் காலை 5.30 மணி ஆகும். தொக்கம் எடுப்பதாக சொல்லும் இடத்திற்கும் சம்பவம் நடந்த இடத்திற்கும் இடையே சுமார் 150 மீட்டர் தொலைவில் இருக்கும். தொக்கம் எடுப்பதற்கு வழியாகத்தான் செல்ல வேண்டும் என்பது இல்லை வேறு வழியாகவும் செல்லலாம் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் நானும் அரசு சாட்சி இரண்டும் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சென்றோம்.

4) நான் கொடுத்த புகாரின் அடிப்படையில்தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் எனது பாட்டியின் பெயர் விபரம் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது பாட்டிக்கு சம்பவத்தின் போது 70 வயது இருக்கும் என்றால் சரிதான். 70 வயது உள்ள

மூதாட்டிக்கு இருசக்கர வாகனத்தில் உட்கார்ந்து வர இயலாது என்று சொன்னால் சரியல்ல.

5) நான் ஓட்டிச் சென்ற வாகனம் ஸ்ப்ளெண்டர் இரு சக்கர வாகனமாகும் அதன் பதிவு எண் TN 60 P 6394 ஆகும். சம்பவ சமயத்தில் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு எனக்கு உரிமம் இல்லை என்றால் சரிதான். நான் ஓட்டிச் சென்ற வாகனத்திற்கு காப்பு சான்றிதழும் பதிவு சான்றிதழும் முறையாக இல்லை என்றால் பதிவு சான்றிதழ் இருந்தது காப்பு சான்றிதழ் இல்லை. சம்பவ சமயத்தில் முன்னாள் சென்ற வாகனத்தை முந்தி செல்ல முற்பட்டு நானாக விபத்தை கீழே விழுந்து ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல.

6) எனது இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் தணிக்கை செய்யவில்லை என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் ஆட்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்றால் சரிதான் ஆனால் அந்த நேரத்தில் இருக்காது. எதிரி ஒட்டி வந்த வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியாது அவர் ஒட்டி வந்த வாகனத்தின் கலர் மாம்பழக் கலராகும்.

7) எனக்கு வலது கால் முட்டியிலும் வலது கால் பாதத்திலும் வலது கையிலும் காயம் ஏற்பட்டது. எனது பாட்டிக்கு இடுப்பில் காயம் ஏற்பட்டு அவர் நடக்க முடியாதபடிக்கு ஆகிவிட்டார். விபத்து ஏற்பட்ட பிறகு எதிரியின் காரில்தான் மருத்துவமனைக்குச் சென்றோம். சிகிச்சைக்கு எங்களுடன் யார் வந்தார்கள் என்றால் நிறைய நபர்கள் வந்தார்கள் அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. நாங்கள் முதலில் மருத்துவமனைக்கு சென்றோம் அதன்பிறகுதான் போலீசுக்கு தகவல் கொடுத்தோம்.

8) நாங்கள் சிகிச்சையில் இருந்தபோது மருத்துவர் எங்களுக்கு ஏற்பட்ட காயம் எப்படி ஏற்பட்டது என்று கேட்டார்களா என்றால் கேட்டார்கள். சாட்சிகள் பிரபாகரன் மற்றும் ஆறுமுகம் சம்பவ இடத்திற்கு எப்படி வந்தார்கள் என்றால்

அவர்கள் மேற்கு திசையில் இருந்து கிழக்கு நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். ஆறுமுகம் என்பவர் ஆட்டோ ஸ்டாண்ட் காரர் அவர் அங்கு நின்று கொண்டு இருந்தார். சம்பவ இடத்தில் 20 கிலோமீட்டர் வேகத்திற்கு மேல் செல்ல முடியாது என்றால் சரியல்ல.

9) சம்பவ இடத்தில் மூன்று மீட்டர் அளவிற்கு வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கால்நடை மருத்துவமனை மற்றும் தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி உள்ளது என்றால் சரிதான். எனக்கு ஓட்டுனர் உரிமம் இல்லாததால் எனக்கு சாலை விதிகள் தெரியாது என்றும் நான அதிவேகமாகவும் கவன குறைவாகவும் ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல. சம்பவம் பற்றி போலீசார் காலை 6 மணி அளவில் மருத்துவமனை வந்து விசாரித்தார்கள்.

10) எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும் நான் பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.06.11 18:27:06 +0530

Judicial Magistrate,
Bodinayakanur.